கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

<u>அமர்வு வழக்கு எண். **24 /2016**</u>

<u>அ.சா. **10**</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 16.09.2021 |

(16.09.2021) இன்று 1963ம் ஆண்டு சட்டம் 44ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் கக்கனூர் கூட்ரோட்டில் பஞ்சாயத்து கிளார்க்காக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஆறுமுகம் என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளையும் எனக்கு தெரியாது. 10 வருடங்களுக்கு முன்பு அரியூலூர் திருக்கையில் உள்ள கக்கனூர் கூட்ரோடு பக்கத்தில் நாங்கள் செங்கல் சூளை எங்கள் மாமா நிலததில் அறுத்துக்கொண்டிருந்தோம். இரவு 2 , 2 1/2 இருக்கும். கூட்ரோட்டில் உள்ள ஒரு ஒயின் ஷாப் பக்கத்தில் அதிகமாக ஒரு சத்தம் கேட்டது. நான் உடனே சம்பவ இடத்திற்கு போனேன். அங்கே நான் பார்க்கும் போது, இரண்டு நபர்களை காவலர்கள் பிடித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். அப்போது திடீரென்ற ஒரு அம்புலன்ஸ் வந்தது. சம்பவ இடத்தில் போலீசார் நின்றுக்கொண்டிருந்தார்கள். காலை 3 1/2 லிருந்து 4 மணிக்குள் சம்பவ இடத்தில் இறந்து கிடந்த ஒரு நபரை விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள். காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் என்னை கூப்பிட்டார்கள். நான் போனேன். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து போலீசார் எழுதிக்கொண்டிருந்த பேப்பர்களில் என்னை கையெழுத்து போட சென்னார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் சம்பவத்தை பார்க்கவில்லை. எதிரிகளை பார்த்ததில்லை. நான் கையெழுத்து செய்ததாக சொல்லும் ஆவணத்தில் வேறு, யார் கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது.

<u>**மறு விசாரணை**</u> இல்லை

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். **24 /2016**

அ.சா.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **நாகையன்** | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | **விவசாயம்** |
| தாலுக்கா | | வயது | 56 |
| மாவட்டம் | | தேதி | 16.09.2021 |

(16.09.2021) இன்று 1963ம் ஆண்டு சட்டம் 44ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

**தற்போது நான் வீரமதுர புதுப்பாளையம் கிராமத்தில் விவசாய தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.6 நபர்களை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை இதற்கு முன்பு நான் பார்தது இல்லை. கொலை சம்பந்தமாக யாருக்கும் யாருக்கும் சம்பந்தம் என்று எனக்கு தெரியாது. எந்த வருடம், எந்த தேதியில் சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக சொல்லும் சங்கதிகளைப் பொருத்து பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரியதின் பேரில் குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

**கடந்த 12.04.2011 அன்று கக்கனூர் எல்லையில் நடந்த கொலை குற்றம் சம்பந்தமாக சந்தேகம் எழுந்த மூர்த்தி மகன் ஐயப்பன், ஏழுமலை மகன் ஐயப்பன் என்பவர்கள் முதல் விசாரணை முடியும் வரை என் பொறுப்பில் இருக்குமாறு காவல் நிலையத்திலிருந்து அழைத்துச்சென்றேன் என்றும், அவர்கள் என் பொறுப்பில் இருக்கும்போது, எதிரிகள் தப்பி ஓடிவிட்டதாகவும், பிறகு, 18.04.2011 அன்று மதியம் 2 1/2 மணியளவில் எதிரிகள் இருவரும் என் வீட்டிற்கு வந்து, குற்றம் செய்தது அவர்கள் தான் என்றும், வி.ஏ.ஓ. விடம் அவர்களை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டதன்பேரில், கிராம நிர்வாக அலுவலருக்கும், கிராம உதவியாளருக்கும் அன்றைய தினம் 3 மணியளவில் தகவல் சொன்னேன் என்றும், அதன் படி கிராம நிர்வாக அலுவலர் எதிரிகளை 3மணிக்கு விசாரித்து**

வாக்குமூலம் பெற்றார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் கிராம நிர்வாக அலுவலர், மற்றும உதவியாளர் முன்பு பதிவு செய்யப்பட்டது என்று எல்லாம் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள்  கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

<u>அமர்வு வழக்கு எண். **24 /2016**</u>

<u>அ.சா.</u>

| பெயர் | பொன்னுரங்கம் | சாதி | |
|---|---|---|---|
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு) |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 16.09.2021 |

(16.09.2021) இன்று 1963ம் ஆண்டு சட்டம் 44ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விழுப்புரததில் குடியிருந்து வருகிறேன். நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். நான் கக்கனூர் கிராம் நிர்வாக அலுவலராகவும் பணிபுரிந்துள்ளேன். இவ்வழக்கு சம்பவ சமயத்தில் கெடார் கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பும் பார்த்துவந்தேன். அ.சா.1 ஆறுமுகத்தை எனக்கு தெரியும். 18.04.2011 அன்று கெடார் காவல் ஆய்வாளர் மதியம் 3 மணிக்கு போன் செய்து, அரியலூர் திருக்கையில் சண்முகம் மகன் சரவணன் கொலை சம்பந்தமாக, மூர்த்தி மகன் ஐயப்பன், ஏழுமலை மகன் ஐயப்பன் ஆகிய 2 நபர்கள் காவல் நிலையத்தில் சரணடைந்துள்ளதாக சொன்னதின் பேரில் நானும், கிராம உதவியாளரும் காவல் நிலையத்தில் சென்று பார்த்தபோது, மேற்படி எதிரிகள் காவல் நிலையத்தில் அமர்ந்திருந்தனர். நான் ஆஜர் எதிரிகளை பார்த்தேன். தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளைத் தான் காவல் நிலையத்தில் பார்த்தேன். எதிரிகள் சரணடைந்தது குறித்து போலீசார் கேட்டதின் பேரில் நானும் அப்போதை கிராம உதவியாளர் ஜானகிராமனும் கையொப்பம் செய்தோம். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்துக்களில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதை தவிர வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என் முன்னிலையில் போலீசார் எதனையும் கைபற்றவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக சொல்லும் சங்கதிகளைப் பொருத்து பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரியதின் பேரில் குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 18.04.2011 அன்று நான் கக்கனூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது மதியம் சுமார் 3 மணியளவில் கெடார், செல்லங்குப்பம் ரோட்டில் நாகையன் என்பவர் எனக்கு போன் செய்து கடந்த 12.04.2011 ம் தேதி இரவு கக்கனூர் எல்லையில், ஆனந்த நகர்/ பிளாட் பி ல் கொலை சம்பந்தமாக 2 பேர் சரணடைய உள்ளதாக தகவல் சொன்னார். உடனே நானும், கிராம உதவியாளர் ஜானகி ராமன் என்பவரும் நாகையன் வீட்டிற்கு வந்து, இருவரையும் விசாரணையை ஆரம்பித்தோம் என்றும், அப்போது மதியம் சுமார் 3 மணியளவில் கஞ்சனூர் வட்ட ஆய்வாளர் அவர்கள் நீங்கள் வந்து, எங்கள் முன்னிலையில் எந்தவிதமான துன்புறுத்தலோ, வற்புறுத்தலோ, ஆசை வார்த்தை இன்றி விசாரணை செய்ய, மேற்படி நபர்களின் மூர்த்தி மகன் ஐயப்பன் என்பவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் சரவணன் தங்களை நந்தினியை காதலித்து கடத்தி சென்று திருமணம் செய்துள்ளார். நந்தினி தனது அண்ணன் சரவனன் வீட்டிற்கு வந்து ஐயப்பனுடன் வாழந்தாலும், நந்தினியை அழைத்து செல்ல ஐயப்பன் அவரது தகப்பனாரையும், சரவணன் தாக்கி, விரட்டி அடித்ததாலும் ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக 3ம் எதிரியான அன்பு என்பவருக்கும், சரவணனுக்கும் பண கொடுக்கல் வாங்கல் காரணமாக திட்டமிட்டு, மேற்படி மூர்த்தி மகன் ஐயப்பன், ஏழுமலை மகன் ஐயப்பன் என்பவர் சேர்ந்து கொடூரமான சரவணனை கொலை செய்துள்ளார்கள் என்றும், தெரியவருகின்ற அன்பு தலைமறைவாகிவிட்டதாகவும், நான் போலீசுக்கு பயந்து என்னிடம் வந்து, சரணடைந்தார்கள் என்றும், அப்போது என்னிடம் எதிரிகள் தாமான கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கிராம உதவியாளர் முன்னிலையில் பதிவு செய்து, அதில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்து, அதை அறிக்கையாக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றும், அதன்பேரில் எதிரிகள் கைது செய்யப்பட்டார்கள் என்றும் இந்த விஷயங்களை எல்லாம் என்னுடைய போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் காவல் நிலையத்தில் சென்று பார்த்ததாக சொல்லும்போது இந்த எதிரிகள் தான் அங்கு இருந்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அங்கு நான் பார்க்கும் போது 2 நபர்கள் தான் இருந்தார்கள்.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

<u>அமர்வு வழக்கு எண். **24 /2016**</u>

<u>அ.சா.**9**</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ஜானகிராமன்** | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | **கிராம உதவியாளர் (ஓய்வு)** |
| தாலுக்கா | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 16.09.2021 |

(16.09.2021) இன்று 1963ம் ஆண்டு சட்டம் 44ன் படி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கன்னனூரில் குடியிருந்து வருகிறேன். நான் கக்கனூரில் கிராம உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். அ.சா.8 பொன்னுரங்கத்தை தெரியும் அவர் எங்கள ஊரில் கிராம நிர்வாக அலுவலராக வேலை செய்தார். கெடார் கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பிலும் இருந்தார். போலிசார் சம்மன் அனுப்பியதன் பேரில் வந்துள்ளேன். சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு கிராம நிர்வாக அலுவலர் பொன்னுரங்கம் என்னிடம் கக்கனூர் மெயின் ரோட்டில், யாரோ ஒருவர் செத்து இடப்பதாகவும் அந்த இடத்திற்கு செல்லவேண்டுமென்றும் என்னிடம் சொன்னார். உடனே நான் அந்த இடத்திற்கு சென்று பார்க்கும்போது, அதற்கு முன்பே இறந்த நபரை ஆம்புலன்ஸில போலிசார் கொண்டு சென்றுவிட்டனர். நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் கிராம நிர்வாக அலுவலர் பொன்னுரங்களம் வந்தார். கிராம உதவியாளருடன் கெடார் காவல் நிலையத்திற்கு போன் மூலமாக எங்கள் கிராம நிர்வாக அலுவலருக்கு போன் வந்தது. காவல் நிலையத்திற்கு செல்லவேண்டும் என்று சொன்னார். நானும் கிராம நிர்வாக அலுவலும் கெடார் காவல் நிலையததிற்கு சென்றோம். கிராம நிர்வாக அலுவலர் காவல் நிலையத்திற்குள் சென்றார். நான் மட்டும் காவல் நிலையத்திற்கு வெளியில் நின்றுகொண்டிருந்தேன். கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டேன் உடனே காவல் நிலையத்திற்குள் சென்றுவிட்டார். இருவரும் வந்துவிட்டோம். என்னிடம் காட்டப்படும் எதிரிகள் கொடுத்ததாக சொல்லும்ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்துக்களில்

2வதாக உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுதது மட்டும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக சொல்லும் சங்கதிகளைப் பொருத்து பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரியதின் பேரில் குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 18.04.2011 அன்று நான் கக்கனூர் கிராம உதவியாளராக பணிபுரிந்த போது மதியம் சுமார் 3 மணியளவில் கெடார், செல்லங்குப்பம் ரோட்டில் நாகையன் என்பவர் கிராம உதவியாளருக்கு போன் செய்து கடந்த 12.04.2011 ம் தேதி இரவு கக்கனூர் எல்லையில், ஆனந்த நகர்/ பிளாட் பி ல் கொலை சம்பந்தமாக 2 பேர் சரணடைய உள்ளதாக தகவல் சொன்னதின் பேரில். உடனே நானும், கிராம நிர்வாக அலுவலரும் நாகையன் வீட்டிற்கு வந்து, இருவரையும் கிராம நிர்வாக அலுவலர் விசாரணையை ஆரம்பித்தார் என்றும், அப்போது மதியம் சுமார் 3 மணியளவில் கஞ்சனூர் வட்ட ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்ய, மேற்படி நபர்களின் மூர்த்தி மகன் ஐயப்பன் என்பவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் சரவணன் தங்களை நந்தினியை காதலித்து கடத்தி சென்று திருமணம் செய்துள்ளாா என்றும், நந்தினி தனது அண்ணன் சரவனன் வீட்டிற்கு வந்து ஐயப்பனுடன் வாழந்தாலும், நந்தினியை அழைத்து செல்ல ஐயப்பன் அவரது தகப்பனாரையும், சரவணன் தாக்கி, விரட்டி அடித்ததாலும் ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக 3ம் எதிரியான அன்பு என்பவருக்கும், சரவணனுக்கும் பண கொடுக்கல் வாங்கல் காரணமாக திட்டமிட்டு, மேற்படி மூர்த்தி மகன் ஐயப்பன், ஏழுமலை மகன் ஐயப்பன் என்பவர் சேர்ந்து கொடூரமான சரவணனை கொலை செய்துள்ளார்கள் என்றும், தெரியவருகின்ற அன்பு தலைமறைவாகிவிட்டதாகவும், நான் போலீசுக்கு பயந்து என்னிடம் வந்து, சரணடைந்தார்கள் என்றும், அப்போது என்னிடம் எதிரிகள் தாமான கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கிராம நிர்வாக அலுவலர் பதிவு செய்து, அதில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் கையெழுத்து செய்து, அதை அறிக்கையாக காவல் ஆய்வாளரிடம் கிராம நிர்வாப அலுவலர் ஒப்படைத்தார் என்றும், அதன்பேரில் எதிரிகள் கைது செய்யப்பட்டார்கள் என்றும் இந்த விஷயங்களை எல்லாம் என்னுடைய போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை

கடந்த 18.04.2011 அன்று நான் கக்கனூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது மதியம் சுமார் 3 மணியளவில் கெடார், செல்லங்குப்பம் ரோட்டில் நாகையன் என்பவர் எனக்கு போன் செய்து கடந்த 12.04.2011 ம் தேதி இரவு கக்கனூர் எல்லையில், ஆனந்த நகர்/ பிளாட் பி ல் கொலை சம்பந்தமாக 2 பேர் சரணடைய உள்ளதாக தகவல் சொன்னார். உடனே நானும், கிராம உதவியாளர் ஜானகி ராமன் என்பவரும் நாகையன் வீட்டிற்கு வந்து, இருவரையும் விசாரணையை ஆரம்பித்தோம் என்றும், அப்போது மதியம் சுமார் 3 மணியளவில் கஞ்சனூர் வட்ட ஆய்வாளர் அவர்கள் நீங்கள் வந்து, எங்கள் முன்னிலையில் எந்தவிதமான துன்புறுத்தலோ, வற்புறுத்தலோ, ஆசை வார்த்தை இன்றி விசாரணை செய்ய, மேற்படி நபர்களின் மூர்த்தி மகன் ஐயப்பன் என்பவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் சரவணன் தங்களை நந்தினியை காதலித்து கடத்தி சென்று திருமணம் செய்துள்ளார். நந்தினி தனது அண்ணன் சரவனன் வீட்டிற்கு வந்து ஐயப்பனுடன் வாழந்தாலும், நந்தினியை அழைத்து செல்ல ஐயப்பன் அவரது தகப்பனாரையும், சரவணன் தாக்கி, விரட்டி அடித்ததாலும் ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக 3ம் எதிரியான அன்பு என்பவருக்கும், சரவணனுக்கும் பண கொடுக்கல் வாங்கல் காரணமாக திட்டமிட்டு, மேற்படி மூர்த்தி மகன் ஐயப்பன், ஏழுமலை மகன் ஐயப்பன் என்பவர் சேர்ந்து கொடூரமான சரவணனை கொலை செய்துள்ளார்கள் என்றும், தெரியவருகின்ற அன்பு தலைமறைவாகிவிட்டதாகவும், நான் போலீசுக்கு பயந்து என்னிடம் வந்து, சரணடைந்தார்கள் என்றும், அப்போது என்னிடம் எதிரிகள் தாமான கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கிராம உதவியாளர் முன்னிலையில் பதிவு செய்து, அதில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்து, அதை அறிக்கையாக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றும், அதன்பேரில் எதிரிகள் கைது செய்யப்பட்டார்கள் என்றும் இந்த விஷயங்களை எல்லாம் என்னுடைய போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் காவல் நிலையத்தில் சென்று பார்த்ததாக சொல்லும்போது இந்த எதிரிகள் தான் அங்கு இருந்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அங்கு நான் பார்க்கும் போது 2 நபர்கள் தான் இருந்தார்கள்.